மரணத்தை ஏற்றுக்கொண்டார், ஆனால் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் சர்வமும் படைத்த தேவனால் உயிர்பிக்கப்பட்டார். பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்து, கர்த்தர் இயேசு வெற்றி சிறந்தார். இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து அவர் வழி நடப்பவர் யாவரும் சத்தியவான்கள். தேவனால் மன்னிக்கப்பட்டவர்கள். இயேசு கிறிஸ்து நமக்கு பதிலாக மரித்து உயிர்த்ததினால் தேவனுக்கும் நமக்கும் உள்ள பிரிவினை நீங்கி அவரோடு ஒப்புரவானோம்.

தேவன் அன்புள்ளவர், நம் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பை கேட்டு, இயேசு கிறிஸ்துவை கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும்பொழுது, அவரோடு சமாதானத்தையும் நித்திய ஜீவனையும், வாழ்வையும் பெற்றுகொள்கிறோம். உன் அழுகுரல் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் தீர்வு கண்டடையப்பட்டது!!

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை குறித்து மேலும் அறிய விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

> *தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.* *(யோவான் 3:16)*

HOME BIBLE STUDY Copyright © HBS. This Tract is Printed and Published in the Year 2025

# இயேசு கண்ட தீர்வு!!



லாசருவின் இன்றைய கல்லரை

## இயேசு கண்ட தீர்வு

முன்னொரு காலத்தில் பெத்தானியா என்னும் கிராமத்தில் லாசரு, மார்த்தாள், மரியாள் என்னும் ஒரே குடும்பத்தை சார்ந்த சகோதர சகோதரிகள் வாழ்ந்து வந்தனர்.

அவர்களில் சகோதரனான லாசரு வியாதியடைந்து மரித்துப் போனான். சகோதரிகள் இந்த செய்தியை, அவர்கள் நேசிக்கும் இயேசுவுக்கு சொல்லியனுப்பினார்கள். இயேசு வந்தபோது, 'லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் ஆனது' என்று சொல்லி சகோதரிகள் கதறி, புலம்பி அழுததையும், அவர்களோடு கூட பெத்தானியா ஊர் ஜனங்களும் அழுவதை கண்ட இயேசு, மரணத்தின் வலியையும், அது ஏற்படுத்தும் விளைவுகளையும் உணர்ந்து ஆவியில் கலங்கி கண்ணீர் விட்டார். அந்த நிலையில்தான் இயேசு "உன் சகோதரன் உயிரோடு எழுந்திருப்பான்" என்று சகோதரிகளுக்கு வாக்களித்தார். பெத்தானியா ஊரார் சொன்னது ஆறுதல், ஆனால் இயேசு சொன்னதோ தீர்வு.

இன்று மனிதனுக்குத் தேவை **பாவ** மன்னிப்பு. பல்வேறு மனவேதனையாலும், குழப்பங்களினாலும் வருந்தி கலங்கிக் கெண்டிருக்கிறான். மனிதனுடைய பிரச்சனைகளுக்கு இயேசுவிடம் தீர்வு உண்டு. அந்த சகோதரிகளின் கண்ணீருக்கு காரணம் அவர்களுடைய சகோதரனின் மரணம், எனவே லாசருவை உயிருடன் எழுப்புவதே இயேசு கண்ட தீர்வு.

இயேசு, கல்லறைக்கு சென்று லாசருவே! வெளியே வா! என்று சத்தமிட்டு கூப்பிட்டார். மரித்த லாசரு உயிரோடு வந்தான். அந்த சகோதரிகளின் மற்றும் பெத்தானிய ஊராரின் அழுகுரல் களிப்பாய் மாறியது. லாசருவுக்கு மீண்டும் வாழ்வு கிடைத்தது. அவர்களின் வாழ்க்கை ஆனந்தமாய் மாறியது.

அன்பரே!... பாவத்தின் பிடியில் சிக்கியிருக்கும் மனிதகுலம் அழிவை நோக்கி போய் கொண்டிருக்கிறது, பாவத்தினால் அனைவரும் சிருஷ்டி கர்த்தரின் பரிபூரண கட்டளைகளை மீறுவதால் அவருடைய மன்னிப்பை பெற வேண்டும். அன்று 'லாசருவே வெளியே வா' என்று சொல்லி மரித்தவனை உயிரோடு எழுப்பியதை போல, இயேசு கல்வாரி சிலுவையில் "பிதாவே இவர்களை மன்னியும்" என்று சொல்லி மனித குலத்திற்கு மன்னிப்பை வழங்கி அக்கிரமத்தினாலும், பாவத்தினாலும் மரித்திருந்த மனிதர்களை உயிர்ப்பித்து புதிய ஜீவனை தந்தருளினார். (எபேசியர் 2:1) இதைத்தான் இயேசு மனிதகுலத்திற்கும், எனக்கும் உங்களுக்கும் கண்ட தீர்வு.

தேவன் அன்பாகவே இருக்கிறார், பாவங்களை மன்னித்து மனிதனை நேசிக்க விரும்புகிறார். தேவ திட்டத்தின் படி, குமாரனாகிய இயேசு கிறிஸ்து கன்னிப் பிறப்பினால் பிதாவால் அனுப்பப்பட்டார். தேசாதிபதியாகிய பிலாத்து நீ 'யூதருடைய ராஜாவா?' என்று கேட்டான் அதற்கு இயேசு 'என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல' என்றார். அப்பொழுது திரும்பவும் பிலாத்து அவரை நோக்கி: 'அப்படியானால் நீ ராஜாவோ' என்றான். இயேசு பிரதியுத்தரமாக: 'நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்' என்றார். கள்வன் ஒருவனை விடுவித்து அவனுக்கு பதிலாக இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். விடுதலையான அந்த கள்வனுக்காகவும் மனித குலத்திற்காகவும் நம் பாவங்களைத் தம்மேல் சுமந்து